අධ්‍යාපන අමාත්‍යාංශය
கல்வி அமைச்சு
Ministry of Education

'ඉසුරුපාය', බත්තරමුල්ල, ශ්‍රී ලංකාව.
'இசுருபாய', பத்தரமுல்ல, இலங்கை.
'Isurupaya', Battaramulla, Sri Lanka.
+94112785141-50 +94112785818
info@moe.gov.lk www.moe.gov.lk

මගේ යොමුව / எனது இல. / My Ref. ED/08/26/06/08/02

ඔබේ යොමුව / உமது இல. / Your Ref.

දිනය / திகதி / Date 2023.03.03

**சுற்றிக்கை இலக்கம் - 05/2023**

சகல மாகாணக் கல்விச் செயலாளர்கள்

சகல மாகாண/ வலயக் கல்விப் பணிப்பாளர்கள்,

சகல மாகாண/ வலயக் கணக்காளர்கள்,

சகல பாடசாலை அதிபர்கள்

**டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்தல்**

கல்வி அமைச்சின் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்பக் கிளை ஊடாக பாடசாலைகள் மற்றும் கணினி நிலையங்களின் உதிரிப்பாகங்களை பராமரித்தல் மற்றும் புதுப்பித்தல் தொடர்பாக தேசிய மட்டத்திலான செயற்பாடு 2007 ஆம் ஆண்டு முதல் நடைமுறைபடுத்தப்படுகின்றது. இந்த செயற்றிட்டத்திற்குரிய சுற்றிக்கை மற்றும் ஆலோசனை கடிதங்கள் பல்வேறு சந்தரப்பங்களில் வெளியிடப்பட்டுள்ளன.

02. சமகாலத்தில் பொதுக் கல்விக்குரிய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்திற்காக விசேடமான செயற்பாடுகள் கல்வி அமைச்சு மூலமாக நிறைவேற்றி வருவதுடன், இந்த பணிகளை மிகவும் வினைத்திறனுடனும் வெளிப்படையாகவும் சிறப்பாக மேற்கொள்வதற்குத் தேவையான ஆலோசனைகள் அடங்கிய வழிகாட்டல் கையேடு ஒன்று தயாரிக்கப்பட்டுள்ளது. அந்த வழிகாட்டல் கையேடு இந்த சுற்றிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ளது. இந்த கையேட்டின் அறிவுரைகளுக்கு இணைவாக பொதுக் கல்வி முறைமைக்குள் டிஜிட்டல் கல்விக்குரிய உட்கட்டமைப்பு வசதிகளை நிறைவேற்றுவது அவசியமாகும்.

03. இந்த விடயம் தொடர்பாக நிலவும் பின்வரும் சுற்றறிக்கை மற்றும் ஆலோசனை கடிதங்கள் பின்வருமாறு மேலும் செயல்படுத்தப்படும்

i. 2008.04.04 ஆம் திகதிய 2008/14 ஆம் இலக்க சுற்றறிக்கை பாடசாலை கணினி ஆய்வு கூடங்களில் கணினி தொடர்புடைய வன்பொருள் பிரச்சினைகளை தீர்ப்பதற்கான சுற்றறிக்கை

ii. ED/01/26/07/01/01 மற்றும் 2010.09.16 ஆம் திகதிய வலய மட்டத்தில் நிறுவப்பட்டுள்ளவன வன்பொருள் மற்றும் வலையமைப்பு தீர்வுக்குழுவின் உறுப்பினர்களை வலய மற்றும் மாகாண தொழில்நுட்ப மதிப்பீடு நடவடிக்கைகளில்

இணைத்துக்கொள்ளும் அறிவுரை கடிதத்தில் “வன்பொருள் மற்றும் வலையமைப்பு தீர்வுக் குழு மற்றும் அதன் உறுப்பினர்கள்” என்பதற்கு பதிலாக “வலய டிஜிட்டல் கல்வி தொழில்நுட்பக் குழு” என திருத்தப்பட வேண்டும்.

iii. இலக்கம் 2010/23 மற்றும் 2010.06.28 ஆம் திகதிய சுற்றிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கணினி புதுப்பித்தலுக்குரிய தர அறிக்கைகள் தொடர்பாக பயன்படுத்தப்படும் மாதிரிக்கு மேலதிகமாக இந்த பணி தொடர்பாக பயன்படுத்தப்படும் இணையவழி மூலமான தர அறிக்கையும் செல்லுபடியாகும் தர அறிக்கையாக பயன்படுத்தலாம்.

04. மேலும், இந்த சுற்றறிக்கை தொடர்பாக வெளியிடப்பட்ட பின்வரும் சுற்றறிக்கை / அறிவுரை கடிதங்களை மீறி இந்த சுற்றறிக்கை மற்றும் இணையவழி கையேட்டின் அறிவுரைகள் பலம் வாய்ந்ததாகும்.

i. 2007.06.07 ஆம் திகதிய ED/01/26/02/46/01 ஆலோசனைக் கடிதம்
ii. 2008.04.08 ஆம் திகதிய மற்றும் ED/01/26/07/01/01 இலக்கத்தைக் கொண்ட ஆலோசனைக் கடிதம்

எம்.என். ரணசிங்க.
செயலாளர்
கல்வி அமைச்சு

பிரதிகள் -

01. கணக்காய்வாளர்
02. சகல மேலதிக செயலாளர்கள்/ பணிப்பாளர் நாயகங்கள், கல்வி அமைச்சு
03. தலைமை நிதி அதிகாரி கல்வி அமைச்சு
04. சகல மாகாண / வலய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப பாடத்திற்குப் பொறுப்பான பிரதி / உதவிப் பணிப்பாளர்கள்
05. சகல தகவல் தொழில்நுட்ப தொலைக்கல்வி மைய ஆலோசகர்கள்

# டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்கான வழிகாட்டல் கோவை

டிஜிட்டல் கல்வி மாற்றமென்பது மிகவும் சிக்கலான ஒரு பணியாகும். மேற்படி சிக்கலான/கடினமான பணியினுள் டிஜிட்டல் கல்விக்கான உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி என்பது மிக முக்கியமானதொரு தேவைப்பாடாகும். சாதாரண கல்விக் கட்டமைப்பினை உற்றுநோக்குகையில், நாடு முழுவதிலும் பரந்து விரிந்து காணப்படுகின்ற 10,155 என்ற எண்ணிக்கையினைக் கொண்ட பாடசாலைக் கட்டமைப்பிற்கு அப்பால் கல்வி அமைச்சு, மாகாண/வலய/கோட்டக் கல்வி அலுவலகங்கள் உட்பட கல்விசார் நிர்வாகத்துடன் தொடர்புடைய நிறுவனங்களும் அத்துடன் தேசிய கல்வியியற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், ஆசிரிய நிலையங்கள், பிரதேச ஆங்கிலமொழிக் கற்றல் நிலையங்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி நிலையங்கள் உட்பட பெருமளவிலான நிறுவனங்களிலும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தியானது அவசியமானதாக காணப்படுகின்றது.

மேற்படி டிஜிட்டல் கல்வி வசதிகள் மேம்பாட்டு செயற்பாட்டினூடாக எதிர்பார்க்கப்படும் முதன்மை எதிர்பார்ப்புகளாவன,

1. கல்விக் கட்டமைப்பினுள் தகவல் தொழில்நுட்ப பாடத்தினைக் கற்பித்தல்.
2. கல்வி நடவடிக்கைகளில் தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்.
3. நிர்வாக மற்றும் முகாமைத்துவ பயன்பாடுகளுக்கு தகவல் தொழில்நுட்பத்தினைப் பயன்படுத்துதல்.
4. கல்வித் தகவல் கட்டமைப்பினை பேணிச்செல்லல்.
5. கல்விசார் நிறுவனங்களுள் திறன் தொழில்நுட்பம் மற்றும் தகவல் தொழில்நுட்ப பயன்பாடுகள் மற்றும் மேம்பாட்டுக்கு அவசியமான வசதிகளைப் பெற்றுக் கொடுத்தல் என்பனவாகும்.

இன்றளவில் டிஜிட்டல் கல்வியுடன் தொடர்புடைய உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் பொருட்டு செய்யப்படுகின்ற அதிக செலவுகளை செயற்றிறன்மிக்கதாக பயன்படுத்துவதற்கும், உரிய வளங்களை மிகச் சிறப்பாகவும் இற்றைப்படுத்தியும் பயன்படுத்துவதற்கு அவசியமான ஆலோசனைகளைப் பெற்றுக் கொடுத்தல் இவ்வழிகாட்டல் கோவை உருவாக்கத்தின் எதிர்பார்ப்பாகும். டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் கீழ் சகல கணினிகள் மற்றும் அதனுடன் தொடர்புடைய பாகங்கள், கணினி அச்சு இயந்திரங்கள், கணினி வலையமைப்பு பாகங்கள், இணையவழி வழங்கல் பாகங்கள், டிஜிட்டல் திரைகள் மற்றும் ஏனைய பாகங்கள் உட்பட டிஜிட்டல் கல்வியுடன் மற்றும் நிர்வாக மற்றும் முகாமைத்துவ செயற்பாடுகளுடன் தொடர்புடைய அனைத்து டிஜிட்டல் பாகங்களும் உள்ளடக்கப்படும்.

மேற்படி விடயங்களுக்காக டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை நியாயமான வகையில் பெற்றுக் கொடுத்தல், மிகச் சிறந்த பயன்பாடு, முறையான பராமரிப்பு, திருத்தங்கள் மற்றும் சூழல்நேயமிக்க வகையில் மின்னணுக் (எலக்ட்ரானிக்) கழிவுகளை அகற்றுதல் ஆகிய முதன்மையான விடயங்களை நிறைவேற்றுதல் மிகவும் அவசியமானதாகும்.

கல்வி அமைச்சு, மாகாண கல்வித் திணைக்களம், வலய/கோட்டக் கல்வி அலுவலகங்கள் உட்பட கல்வி நிர்வாகத்துடன் தொடர்புடைய நிறுவனங்கள், தேசிய கல்வியிற் கல்லூரிகள், ஆசிரிய கலாசாலைகள், ஆசிரிய தொழில் அபிவிருத்தி நிலையங்கள், பிரதேச ஆங்கிலமொழிக் கற்றல் வளநிலையங்கள், தகவல் தொழில்நுட்ப மற்றும் தொலைக்கல்வி நிலையங்கள் மற்றும் சகல அரசாங்க பாடசாலைகளுக்கும் இந்த டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி வழிகாட்டல் கோவை பொருத்தப்பாடுடையதாகும்.

இந்த வழிகாட்டல் கோவை கீழ்வரும் அத்தியாயங்களை உள்ளடக்கியதாகும்.

01. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்
02. டிஜிட்டல் பாகங்களின் திருத்த நடவடிக்கைகள்
03. டிஜிட்டல் பாகங்கள் முறைகேடாக கையாளப்படல்
04. மாகாண/ வலய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி அலகினை தாபித்தல்
05. வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழு
06. பாடசாலை டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழு
07. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு மற்றும் திருத்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்
08. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்புத் தகவல்களை தொடர்ச்சியாக பேணிச் செல்லல்

## 01. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குதல்

1. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்கும் செயற்பாடு வெளிப்படைத்தன்மையுடனும் சமமானதாகவும் அமையும் வகையில் மேற்கொள்ளப்பட வேண்டும். இதற்கென உரிய ஆகக் குறைந்த தரங்களைக் கொண்டதாக அமையும் வகையில் சகல மாணவர்களுக்கும் டிஜிட்டல் கல்வியை பெறக்கூடிய வகையில் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை மேம்படுத்துதல் வேண்டும்.
2. பாடசாலைகளுக்குரியதாக தயாரிக்கப்படும் ஆகக் குறைந்த தரங்கள் மற்றும் குணாம்சத்தை அதிகரிப்பதற்காக கல்வி அமைச்சினால் தயாரிக்கப்பட்டு

இற்றைப்படுத்தப்படுகின்ற விவரக் குறிப்புகளுக்கு இசைவானதாக அமையும் வகையில் வளங்களைப் பகிர்தல் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. சகல டிஜிட்டல் பாகங்களை வழங்குவதற்குரியதான விவரக் குறிப்பு மற்றும் வழங்குநர்கள் பற்றிய விபரங்கள் மற்றும் பொறுப்பான காலப்பகுதியினுள் திருத்தங்களைச் செய்தல் தொடர்பிலான தகவல்களை உரிய பாடசாலைகள்/ கல்வி நிறுவனங்களுக்கு பெற்றுக்கொடுத்தல் வேண்டும்.
4. மேற்படி வழங்கல்கள் நீதியானதாக அமைவதற்கு சரியான தகவல்களின் அடிப்படையில் அமைந்த தேவைப்பாடுகளை அடையாளம் கண்டு அவ் வழங்கல்களை மேற்கொள்ள வேண்டும்.
5. அரசாங்கத்தினால் வழங்கப்படும் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளுக்கு மேலதிகமாக, பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களுக்கு கிடைக்கும் வளங்களும் அரசாங்கத்திற்குரிய வளங்களாக கருதப்படுவதுடன் அந்த டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய தகவல்களும் பொருள் விவரப் பட்டிலிலும் உரிய ஆவணங்களிலும் உள்ளடக்குதல் வேண்டும்.

## 02. டிஜிட்டல் பாகங்களின் திருத்த நடவடிக்கைகள்

1. கணினி, கணினி வலையமைப்புக்களினதும் ஏனைய பாகங்களினதும் உத்தரவாதக் காலப்பகுதிக்குள்ளான திருத்தங்களை வழங்குநர்கள் செய்தல் வேண்டும்.
2. உத்தரவாதக் காலப்பகுதி நிறைவடைந்ததன் பின்னர் மேற்கொள்ளப்படும் சகல திருத்த நடவடிக்கைகளும் வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவினூடாக மேற்கொள்ளப்பட வேண்டும்.
3. வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவிற்கு திருத்தப் பணிகளை மேற்கொள்வது கடினமாகும் சந்தர்ப்பங்களின் போது, அக்குழுவின் விதப்புரையின் மீது உரிய பாகங்கள் பற்றி தேசிய மட்ட டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவினது அல்லது உரிய வழங்குநர் நிறுவனத்தின் ஒத்துழைப்பினை பெற்றுக் கொள்ள வேண்டும்.
4. பாடசாலையில் காணப்படும் கணினி மற்றும் வலையமைப்பு பாகங்களில் குறைபாடுகள் காணப்படின் அக்குறைபாடுகளை எழுத்து மூலமாக, தொலைபேசியூடாக, சமூக ஊடகங்கள் வாயிலாக, மின்னஞ்சல் மூலமாக அல்லது எதிர்காலத்தில் அபிவிருத்தி செய்யப்படவுள்ள இணையவழிக் கட்டமைப்பினைப் பயன்படுத்தி அதிபரினால் வலய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அலகிற்கு தாமதமின்றி அறிவித்தல் வேண்டும்.

## 03. டிஜிட்டல் பாகங்கள் முறைகேடாக கையாளப்படல்

1. திருத்தங்களைச் செய்ய முடியாத கணினிகள் மற்றும் கணினி வலையமைப்பு பாகங்களை பொருட் பதிவேட்டில் இருந்து அகற்றப்படவேண்டிய சந்தர்ப்பங்களின் போது வருடாந்த பொருள் மதிப்பீட்டுக்கு முன்னதாக டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் (ZDETT) குழுவிடமோ அல்லது உரிய நிறுவனத்திடம் அவசியமாக பரிந்துரைகளைப் பெற்றுக்கொள்ளல் வேண்டும்.
2. மேற்படி அகற்றலுக்காக பரிந்துரைக்கப்படும் பொருட்களை அகற்றுவதற்காக இணையவழிக் கட்டமைப்பில் வழங்கப்படும் மாதிரிப் படிவத்தினூடாக குழு அங்கத்தவர்கள் இருவரினது விதப்புரையுடன் மாகாண/ வலய அல்லது உரிய நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப விடயத்திற்கு பொறுப்பான பணிப்பாளர்/ டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பணிப்பாளர்/ பி.க.ப./ உ.க.ப. அனுமதியைப் பெறுதல் வேண்டும்.
3. முடியுமான அனைத்து சந்தர்ப்பங்களிலும் அகற்றப்படும் உபகரணங்களுக்குரியதாக அவ் உபகரணங்களில் இருந்து மேலும் பயன்படுத்தக்கூடிய பாகங்களின் பகுதிகள் காணப்படுமாயின், அப்பாகங்களின் பகுதிகளை அகற்றிக்கொண்டு உரிய நிறுவனத்தின் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அலகினுள் களஞ்சியப்படுத்தி வைத்து அவற்றை தேவைப்படும் பாடசாலைகள் அல்லது நிறுவனங்களின் பாகங்கள் திருத்துகின்ற போது வழங்க வேண்டும். இது தொடர்பிலான தகவல்களை இற்றைப்படுத்தியதாக பேணிச்செல்ல வேண்டும்.
4. பொருள் மதிப்பீட்டின்போது கணினி மற்றும் அதற்குரியதான பாகங்களை பொருள் விவரப் பட்டியலில் இருந்து அகற்றுவதற்கான இயலுமையானது, உரிய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவின் விதப்புரையுடன் உரிய நிறுவனத்தின் தகவல் தொழில்நுட்ப விடயப்பொறுப்பு பணிப்பாளர்/ டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திப் பணிப்பாளர்/ பி.க.ப./ உ.க.ப. அனுமதியின் மீது மட்டுமே மேற்கொள்ள முடியும்.

## 04. மாகாண/ வலய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் அபிவிருத்தி அலகினை தாபித்தல்.

1. பாடசாலைகள் மற்றும் கல்வி நிறுவனங்களில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளின்போது உரிய விடயங்களை வழிநடாத்துதல், ஒருங்கிணைத்தல் மற்றும் தொழில்நுட்ப ஒத்துழைப்பை வழங்குதல் ஆகியவற்றுக்காக நிலையான ஒருங்கிணைப்பு நிலையமொன்று இருப்பது அவசியமாகும்.

2. இதற்கென கல்வி அமைச்சினுள் தாபிக்கப்படும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கிளையுடன் இணைந்ததாக மாகாண கல்வித் திணைக்களம்/ வலயக் கல்வி அலுவலகம் உட்பட முதன்மையான கல்வி நிர்வாக கட்டமைப்புக்களினுள் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அலகொன்றினைத் தாபித்தல் வேண்டும். தற்போதைக்கு மேற்படி நிறுவனங்களில் 2011.06.21 ஆம் திகதிய 2011/20 ஆம் இலக்க சுற்றுநிருபத்திற்கமைவாக தகவல் தொழில்நுட்ப அலகொன்று தாபிக்கப்பட்டிருப்பின் அதனுடன் இணைந்ததாக இந்த அலகினையும் நிறுவுதல் வேண்டும்.

3. இந்த அலகு மாகாண/ வலய தகவல் தொழில்நுட்ப விடயப் பொறுப்பு பி.க.ப./ உ.க.ப. அல்லது தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் கீழ் தாபிக்கப்படல் வேண்டும்.

4. இந்த அலகின் பணிகளுக்காக அபிவிருத்தி உத்தியோகத்தர் சேவையின்/ தகவல் தொழில்நுட்ப சேவையின் அல்லது முகாமைத்துவ உத்தியோகத்தர் சேவை ஆகிய சேவையிலுள்ள உத்தியோகத்தர்கள் இருவரேனும் முழுநேர அடிப்படையில் இணைப்புச் செய்தல் வேண்டும்.

5. இதற்கு மேலதிகமாக வலய/ கோட்டக்கல்வி மட்ட தகவல் தொழில்நுட்ப ஆசிரிய ஆலோசகர் சேவையிலுள்ளவர்களாயின் அவர்களுயம் இந்த அலகிற்கு தேவைப்பாட்டின் அடிப்படையில் இணைத்துக்கொள்ள முடியும்.

6. வலய டிஜிட்டல் கல்வி தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர்கள் (வலய மென்பொருள் வலையமைப்புக் குழாத்தின் ஆசிரியர்கள்) இந்த அலகின் ஒருங்கிணைப்பின் கீழ் கடமையாற்றுதல் வேண்டும்.

7. ஏனைய கல்வி நிறுவனங்களுக்கும் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அலகொன்றினை பொருத்தமான வகையில் தாபித்தல் வேண்டும்.

8. இந்த அலகின் பணிக்கடமைகள்,

   I. மாகாண/ வலய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய சகல தகவல்களையும் இற்றைப்படுத்தி பேணுதல்.

   II. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி பற்றிய திட்டங்களைத் தயாரித்தல்.

   III. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குரியதான பணிகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

   IV. தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு மற்றும் திருத்தங்களை மேற்கொள்வதற்கான நடவடிக்கைகளை செயற்படுத்துதல்.

   V. டிஜிட்டல் பாகங்களை திருத்துதல்/ பராமரிப்பு பற்றிய தகவல்களை சேகரித்தல் மற்றும் இற்றைப்படுத்தியதாக பேணிச் செல்லல்.

   VI. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளை வழங்குவதற்குரியதான மேற்படி பாகங்கள் உட்பட சகல உட்கட்டமைப்பு வசதிகளும் உரிய

வகையில் வழங்கப்பட்டுள்ளனவா என்பதனை பரிசோதித்தல் மற்றும் பொருட்கள் பற்றிய ஒழுங்குபடுத்தல்.

VII. கல்வி அமைச்சு/ மாகாண கல்வித் திணைக்களம் உட்பட கல்வி நிறுவனங்களூடாக வெளியிடப்படும் ஆலோசனைகள் மற்றும் சுற்றுநிருபங்களின் படி தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாட்டிற்குரியதான கடமைகளை நிறைவேற்றுதல்.

VIII. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் பாவனை தொடர்பில் ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களை தெளிவூட்டுதல் மற்றும் பயிற்றுவித்தல்.

IX. பாடசாலை வன்பொருள் மற்றும் வலையமைப்பு குழுக்களை (பாடசாலை டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுக்கள்) தாபித்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

X. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் திருத்தங்களுக்குரியதாக வழங்கப்படும் பாகங்கள்/ கருவிகள் பற்றிய தகவல்களை பேணிச் செல்லல் மற்றும் அவ்வுபகரணங்களை களஞ்சியப் பிரிவுடன் ஒருங்கிணைத்து பாடசாலைகளில் திருத்தங்களுக்காக வழங்குதல்.

XI. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக்குரியதாக மேற்கொள்ளப்படும் பெறுகை நடவடிக்கைகளுக்கு அவசியமான தொழில்நுட்ப ஒத்துழைப்பினை பெற்றுக் கொடுத்தல்.

XII. பாடசாலைகளில்/ கல்வி நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்ப பாகங்கள் முறைகேடாக கையாளப்படல் தொடர்பிலான விதப்புரைகளை வழங்குதல்.

XIII. அகற்றப்படுகின்ற டிஜிட்டல் உபகரணங்களுள் மேலும் பயன்படுத்தக்கூடியதான பாகங்கள் காணப்படுமாயின், அப்பாகங்களை அகற்றிக் கொள்ளல், களஞ்சியப்படுத்தல், அப்பாகங்கள் பற்றிய தகவல்களை பேணிச்செல்லல் மற்றும் அப்பாகங்களை அவசியமான திருத்த நடவடிக்கைகளுக்கு பெற்றுக் கொடுத்தல்.

XIV. இவ்விடயத்திற்காக கல்வி அமைச்சினூடாக மென்பொருள் கட்டமைப்பொன்று தாபிக்கப்படுவதற்கு முன்மொழியப்பட்டுள்ளதுடன் அக்கட்டமைப்பு தாபிக்கப்படும் வரையில் அத்தகவல்களை பொருத்தமான வகையில் சேகரித்து வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

XV. இலத்திரனியல் கழிவுகளை (E–waste) சூழல் நேயமிக்கதாக அகற்றுவதற்கான நடவடிக்கைகளை ஒருங்கிணைப்பு செய்தல்.

XVI. பாடசாலைகளுக்கு தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி மற்றும் இணையதள கொடுப்பனவுகளுக்காக வழங்கப்படும் நிதி ஒதுக்கீடுகளை பொருத்தமான வகையில் பெற்றுக் கொடுத்தல் மற்றும் அந்நடவடிக்கைகளை மேற்பார்வை மற்றும் ஒருங்கிணைப்பு செய்தல்.

## 05. வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழு ZDETT

1. இந்த குழுவிற்கு தற்போது மாகாண/ வலயமட்டத்தில் தாபிக்கப்பட்டுள்ள மென்பொருள் மற்றும் வலையமைப்பு குழாத்தின் ஆசிரியர்களுள் சிறந்த பங்களிப்பினை நல்கி வரும், இக்கடமைகளில் ஈடுபட்டுள்ள சகல ஆசிரியர்கள் மற்றும் உத்தியோகத்தர்களும் உள்ளடங்குவர்.
2. தற்போதுள்ள மென்பொருள் குழாத்தின் ஆசிரியர்கள் போதுமானதாக இல்லையெனில், தேவையான வகையில்கல்வி அமைச்சின் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் கிளையினூடாக இதற்கான புதிய உறுப்பினர்களை பயிற்றுவித்துக்கொள்ள முடியும். இதற்காக உரிய சந்தர்ப்பத்தில் தேவைப்பாடு தொடர்பில் கல்வி அமைச்சிற்கு அறிவிப்புச் செய்தல் வேண்டும்.
3. இதற்கென போதுமானளவு ஆசிரியர்களை தெரிவு செய்துகொள்வதற்கான இயலுமை இல்லாத சந்தர்ப்பங்களில் வலயத்தில் பணியாற்றும் இந்த விடயம் தொடர்பில் அறிவினைக் கொண்ட அபிவிருத்தி உத்தியோகத்தர்களை பயிற்றுவித்து இக்குழுவின் பணிகளுக்காக ஈடுபடுத்த முடியும்.
4. பாடசாலையில் மற்றும் கல்வி அமைச்சின் கீழுள்ள நிறுவனங்களில் கணினி, கணினி வலையமைப்பு மற்றும் டிஜிட்டல் பாகங்களில் காணப்படும் குறைபாடுகளை அடையாளம் காணல், திருத்தங்களைச் செய்தல் மற்றும் திருத்தங்களைச் செய்ய முடியாத பொருட்களை அகற்றுவதற்கான பரிந்துரைகளை செய்தல் இக்குழுவினூடாக மேற்கொள்ளப்படும்.
5. ஒரு வலயத்திற்கான குழுவில் ஆகக் குறைந்தது 05 உறுப்பினர்கள் இருக்க வேண்டும் என்பதுடன் 10 உறுப்பினர்களை விஞ்ஞாது இருத்தல் வேண்டும்.
6. தகவல் தொழில்நுட்ப ஆசிரியர்கள், தகவல் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்கள் மற்றும் தொழில்நுட்ப அறிவுடைய அதில் ஆர்வம் காட்டுகின்ற அபிவிருத்தி உத்தியோகத்தர்களையும் இக்குழுவின் அங்கத்தவர்களாக முறையான பயிற்சியை வழங்கியதன் பின்னர் ஈடுபடுத்த முடியும்.

I. வலய தகவல் தொழில்நுட்ப விடயப் பொறுப்பு பிரதி/ உதவிக் கல்விப் பணிப்பாளரினால் மேலே தெரிவிக்கப்பட்ட வகையில் அங்கத்தவர்களை தெரிவு செய்தல் மற்றும் பரிந்துரைக்கப்பட்ட பெயர்களை மாகாண தகவல் தொழில்நுட்ப விடயப் பொறுப்பு உ..க.ப./பி.க.ப. ஊடாக கல்வி அமைச்சிற்கு சமர்ப்பிக்க நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

II. கல்வி அமைச்சின் தகவல் தொழில்நுட்பக் கிளை/ டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கிளையினூடாக கோட்பாட்டு மற்றும் செயன்முறைப் பயிற்சியை வழங்கியதன் பின்னர் வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்ப (ZDETT) குழுவின் அங்கத்துவம் வழங்கப்படும். திறமையாக செயற்படாமை மற்றும் வேறு காரணங்களின் அடிப்படையில் அங்கத்துவத்திலிருந்து அகற்றும் அதிகாரம் கல்வி அமைச்சிற்குரியதாகும்.

III. வலய தகவல் தொழில்நுட்ப பணிப்பாளரின் கண்காணிப்பின் கீழ் வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் (ZDETT) குழுவின் அங்கத்தவர்களுக்கு மாத்திரம் 5.4 இலக்கத்திற்குரிய பணிகளுக்காக செயற்படுவதற்கு அதிகாரம் அளிக்கப்படுகிறது.

IV. இக்குழுவின் அங்கத்தவர்களூடாக பணிகளை நிறைவேற்றிக் கொள்வதற்காக அதிபரினால் வெள்ளிக்கிழமை அல்லது வலய தகவல் தொழில்நுட்ப பணிப்பாளரினால் தீர்மானிக்கப்படுகின்ற ஓர் தினத்தில், வாரத்திற்கு ஒருநாள் பாடசாலையில் கற்பித்தல் நடவடிக்கைகள் மற்றும் ஏனைய கடமைகளில் இருந்து விடுவிப்புச் செய்யப்படுதல் வேண்டும். உரிய கடமைகளுக்காக கடமை விடுமுறை வழங்கப்பட வேண்டும்.

V. வலய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களினால் இக்குழுவின் அங்கத்தவர்களுக்கு உரிய வலயங்களில் தீர்மானிக்கப்பட்ட எண்ணிக்கையிலான பாடசாலைகளை ஒப்படைக்க வேண்டுமென்பதுடன், அவர்கள் அப்பாடசாலைகளில் கணினி மற்றும் ஏனைய பாகங்களை பராமரித்தல் மற்றும் திருத்த நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும்.

VI. வருடாந்த/ மாதாந்த பராமரிப்பு மற்றும் திருத்த அட்டவணைக்கமைவாக உரிய பணிகளை நிறைவு செய்து அது தொடர்பிலான அறிக்கையொன்றினைத் தயாரித்து வலய தகவல் தொழில்நுட்ப ஒருங்கிணைப்பு உத்தியோகத்தருக்கு அடுத்துவரும் மாதத்தின் முதல் வாரத்தினுள் ஒப்படைத்தல் வேண்டும்.

VII. திருத்த நடவடிக்கைகளுக்காக விண்ணப்பித்துள்ள ஓர் பாடசாலையில் திருத்துவதற்காக உள்ள கணினிகள் மற்றும் பாகங்களின் எண்ணிக்கை 05 இற்கும் குறைவாக காணப்படின் ZDETT குழுவின் ஒரு அங்கத்தவரும், திருத்துவதற்காக உள்ளவை அதற்கு அதிகமெனில் வலய ஒருங்கிணைப்பு உத்தியோகத்தரின் பரிந்துரையின் மீது பல அங்கத்தவர்கள் பணிகளுக்கு ஈடுபடுத்தப்பட வேண்டும். மேலதிக ஒத்துழைப்புக்களை பாடசாலை டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவினூடாக பெற்றுக்கொள்ள வேண்டும்.

VIII. கணினித் திருத்த நடவடிக்கைகளுக்காக பாடசாலைகளுக்கு வருகைதரும் வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவின் (ZDETT) அங்கத்தவர்களுக்கு கல்வி அமைச்சினூடாக அனுமதிக்கப்பட்டுள்ள கட்டண அளவுகளின் அடிப்படையில் கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

IX. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர்கள் பாடசாலைக்கு வழங்கிய சேவை தொடர்பில் பாடசாலை தகவல் தொழில்நுட்ப நிலையத்தின் குறிப்புப் புத்தகத்தில் (log book) பதிவு செய்து பேணிச்செல்லல் வேண்டும்.

X. பாடசாலைகள் அல்லாத வேறு கல்வி நிறுவனங்களில் டிஜிட்டல் கல்வி பாகங்களை பராமரித்தல் மற்றும் திருத்தப் பணிகளுக்கான நடவடிக்கைகள்

கல்வி அமைச்சின் கீழ் காணப்படும் வேறு நிறுவனங்களுக்குரிய சகல கணினிகள், கணினி வலையமைப்புகள் மற்றும் பாகங்களைப் பராமரித்தல், திருத்த வேலைகள் மற்றும் அகற்றுதல் தொடர்பில் பின்பற்றப்பட வேண்டிய முறைமைகள் பின்வருமாறு.

i. அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகளை தமது நிறுவனத்தினூடாக தொடர்ச்சியாக மேற்கொள்வது அவசியமாகும்.
ii. இந்நிறுவனங்களுக்கான டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவை பொருத்தமான வகையில் அமைத்துக் கொள்ளுதல் வேண்டும்.
iii. திருத்தப் பணிகள் மற்றும் அகற்றும் நடவடிக்கைகள் டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவினூடாக (DETT) மேற்கொள்ளப்படுதல் வேண்டும். அக்குழுவினால் மேற்கொள்ள முடியாத பணிகளை நிறுவனத்திற்கு அண்மித்த வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவினுடாக (ZDETT) அல்லது தேசிய மட்ட டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவினூடாக நிறைவேற்றிக் கொள்ளல் வேண்டும். இதற்கான கொடுப்பனவுகள் 7.2.iii இன் அடிப்படையில் அமைதல் வேண்டும்.

## 06. பாடசாலை டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழு (SDETT)

பாடசாலையில் பாகங்களைப் பராமரித்தல் பணிகளுக்காக தகவல் தொழில்நுட்ப ஆசிரியர் அல்லது அதற்கான தகைமைகளைக் கொண்ட வேறு இரு ஆசிரியர்களின் பொறுப்பில் 8,9,10 ஆம் ஆண்டுகளில் இருந்து தெரிவு செய்யப்படும் மாணவர்களைக் கொண்ட பாடசாலை டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவை அமைத்துக் கொள்ளல் வேண்டும்.

குழுவின் கட்டமைப்பு மற்றும் கடமைகள் :

I. இக்குழுவின் ஆகக் குறைந்த மாணவர் அங்கத்தவர்களின் எண்ணிக்கை 06 ஆகும்.
II. சகல மாணவர் அங்கத்தவர்களும் தரம் 8,9,10 இல் இருந்து தெரிவு செய்யப்படுதல்.
III. பாடசாலைகளில் பணியாற்றும் இலங்கைத் தகவல் தொழில்நுட்ப சேவையின் உத்தியோகத்தர்கள் இருப்பார்களாயின் அவர்களும் இக்குழுவின் அங்கத்தவர்களாவர்.
IV. ஆசிரியரின் மேற்பார்வையின் கீழ் இக்குழுவினூடாக சிறிய திருத்தங்கள் மற்றும் அன்றாட பராமரிப்பு நடவடிக்கைகளை மேற்கொள்ளல்.
V. பயிற்சிகளை வலய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் தொழில்நுட்பக் குழுவினூடாக வருடாந்தம் பெற்றுக் கொடுத்தல்.

VI. இதன் மாணவர் அங்கத்தவர்களின் ஊக்குவிப்பிற்காக மதிப்பீடுகளை மேற்கொள்ளல்.

VII. பாடசாலையினுள் பாகங்களைப் பராமரித்தல், சிறிய திருத்தப் பணிகள் மற்றும் இணையதள வசதிகளின் பொருட்டு பாடசாலையின் வருடாந்த திட்டத்தில் நிதித்தொகையொன்றினை ஒதுக்கீடு செய்தல்.

VIII. கணினி ஆய்வுகூடங்கள் மற்றும் ஏனைய பாகங்களை உரிய முறையில் இற்றைப்படுத்தியதாக பேணிச்செல்லல் உரிய அலகிற்கு பொறுப்பான ஆசிரியரின் கடமையாகும் என்பதுடன் அந்நடவடிக்கைகள் பாடசாலையின் உள்ளக மதிப்பீட்டுக்கு உட்படுத்தப்படுதல் வேண்டும்.

IX. பாடசாலைத் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப நிலையக் கையேட்டின் படி பாகங்களை பொருள் விவரப் பட்டியலில் உள்ளடக்குதல் மற்றும் அதற்குரிய ஆவணங்களை பராமரித்தலும் வேண்டும்.

X. பாடசாலை மட்டத்திலான கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தீர்வுக் குழுவை நிறுவுதல் 2011/19 சுற்றுநிருபத்தின் ஆலோசனைகளுக்கமைவாக தொடர்ந்தும் இடம்பெற வேண்டுமென்பதுடன் பாடசாலை மட்டத்திலான “கணினி வன்பொருள் மற்றும் வலையமைப்புத் தீர்வுக் குழு” என்பதற்கு பதிலாக “பாடசாலை டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழு” என திருத்தம் செய்யப்படுதல் வேண்டும்.

கவனத்திற்கு : பாடசாலைகள் அல்லாத ஏனைய கல்வி நிறுவனங்களின் டிஜிட்டல் பாகங்களை பொருள் விவரப் பட்டியலில் உள்ளடக்குதல் மற்றும் பராமரிப்பு நடவடிக்கைகளுக்காக பொருத்தமான கட்டமைப்பினையும் வேலைத்திட்டத்தினையும் உரிய நிறுவனங்கள் அமைத்துக் கொள்வதற்கு நடவடிக்கை எடுத்தல் வேண்டும்.

## 07. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகளின் பராமரிப்பு மற்றும் திருத்த நிகழ்ச்சித்திட்டத்தை நடைமுறைப்படுத்துதல்

1. இந்த நிகழ்ச்சித் திட்டமானது வரவுசெலவுத்திட்ட நிதி ஒதுக்கீட்டின் அடிப்படையில் நடைமுறைப்படுத்தப்படும். தேசிய பாடசாலைகள் மற்றும் மாகாண பாடசாலைகளுக்கான வெவ்வேறான நிதி ஒதுக்கீடுகளின் அடிப்படையில் 2023 ஆம் ஆண்டிலிருந்து இது நடைமுறைப்படுத்தப்படும்.
2. தேசிய பாடசாலைகளுக்கு

   I. தேசிய பாடசாலைகளுக்குரிய பராமரிப்பு மற்றும் திருத்தப் பணிகள் மாகாண மட்டத்தில் ஒன்றிணைக்கப்பட்ட தேசிய பாடசாலைகளுக்குரிய தகவல்களை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்படும் பராமரிப்புத் திட்டத்தின் அடிப்படையில் கல்வி அமைச்சின் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்திக் கிளையினூடாக மாகாண/வலய தகவல் தொழில்நுட்ப

ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்கள் மற்றும் டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்ப குழுவின் வளப்பங்களிப்புடன் மேற்கொள்ளப்படும்.

II. மேற்படி பராமரிப்பு நடவடிக்கைகளுக்கு அவசியமான பாகங்கள் கல்வி அமைச்சினூடாக பெறுகை முறைமையினைப் பின்பற்றி கொள்வனவு செய்யப்படும். உரிய பாகங்களுக்கு மேலதிகமாக ஏதேனும் உதிரிப் பாகங்கள் அவசியப்படுமெனில், உரிய தேசிய பாடசலைகளூடாக கொள்வனவு செய்து வழங்கப்பட வேண்டும்.

III. இந்த திருத்தப் பணிகளை மேற்கொள்வது தொடர்பிலான தொழில்நுட்ப ஒத்துழைப்புனை வழங்கும் வளவாளர் நபர்களுக்கான கொடுப்பனவுகள் கல்வி அமைச்சினூடாக, நிகழ்ச்சித்திட்டங்கள்/செயலமர்வுகளை நடாத்துவதற்குரியதாக வளவாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டுள்ள கட்டண அளவுகளுக்கமைவாக வழங்கப்படுதல் வேண்டும். இதற்கென தற்போது நடைமுறையிலுள்ள EST/7/ALLOW/05/0037-4 இலக்க மற்றும் EST/7/EXAMS/05/1007-6 இலக்க கடிதத்தின் கட்டண அளவுகளை பின்பற்றுதல் வேண்டுமென்பதுடன் எதிர்காலத்தில் இதில் ஏதேனும் திருத்தங்கள் மேற்கொள்ளப்படின் அத்திருத்தங்களுக்கமைவாக கொடுப்பனவுகள் மேற்கொள்ளப்பட வேண்டும்.

IV. கல்வி அமைச்சின் நேரடித் தலையீடு இல்லாத போதிலும் கூட வலய டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர்கள் இந்த திருத்தப் பணிகளுக்காக பங்குபற்ற முடியுமென்பதுடன், உரிய கொடுப்பனவுகள் மேற்படி இலக்கம் 07 இன் iii ஆம் பந்திக்கமைவாக மேற்கொள்ளப்படல் வேண்டும்.

3. மாகாண சபை பாடசாலைகளுக்கு

I. மாகாணப் பாடசாலைகளில் மேற்கொள்ளப்பட வேண்டிய திருத்தப் பணிகள் மற்றும் பராமரிப்புத் திட்டம் வருடாந்தம் வலய மட்டத்திலும் மாகாண மட்டத்திலும் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

II. மேற்படி திட்டத்திற்கமைவாக திருத்தப் பணிகளுக்கு அவசியமாகும் பாகங்கள்/ கருவிகள் வருடாந்தம் ஒதுக்கீடு செய்யப்படும் ஒதுக்கீடுகளை அடிப்படையாகக் கொண்டு கல்வி நிரல் அமைச்சினூடாக கொள்வனவு செய்து பெற்றுக்கொடுத்தல் அல்லது உரிய பாகங்களைக் கொள்வனவு செய்வதற்கு அவசியமான நிதி ஒதுக்கீடுகளை உரிய மாகாண கல்வித் திணைக்களத்திற்கு பெற்றுக் கொடுத்தல்.

III. இதன்போது பெறுகை வழிகாட்டல்களைப் பின்பற்றி உரிய பாகங்கள்/ கருவிகள் கொள்வனவு செய்யப்படுதல் வேண்டும்.

IV. இவ்வாறு பெற்றுக் கொடுக்கக் கூடிய ஒதுக்கீடுகளின் அளவானது இப்பணியின் பொருட்டு ஒதுக்கீடு செய்யப்படும் நிதியின் அளவின் மீது

தீர்மானிக்கப்படும் என்பதாலும் அது குறிப்பிட்ட தேவைப்பாடுகள் அனைத்தையும் நிறைவேற்றுவதற்கு போதுமானதாக அமையாது என்பதாலும் மாகாண மட்டத்தில் தயாரிக்கப்படும் வருடாந்த செயற்பாட்டுத் திட்டத்தில் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தியின் கீழ் நிதி ஒதுக்கீட்டினை மெற்கொள்வது தொடர்பில் கவனம் செலுத்துதல் வேண்டும்.

V. மாகாண பாடசாலைகளில் மாகாண/வலய மட்டத்தில் மேற்கொள்ளப்படும் திருத்தப் பணிகளுக்கான ஏனைய தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துகொள்வதற்கு அவசியமான நிதி ஒதுக்கீட்டினை உரிய தேவைப்பாடு மற்றும் மாகாண/வலய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் திட்டத்தின் அடிப்படையில் மாகாண திணைக்களங்களுக்கு ஒப்படைக்கப்படும். மாகாண மட்டத்தில் தயாரிக்கப்படும் டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு திட்டத்தின் அடிப்படையில் ஒவ்வொரு வலயத்தின் தேவைப்பாடுகளை அடிப்படையாகக் கொண்டு நிதி ஒதுக்கீடுகள் வலயக் கல்வி அலுவலகங்களுக்கு ஒதுக்கீடு செய்து வழங்கப்பட வேண்டும்.

VI. மேற்படி ஒதுக்கீடுகள் வலய டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி அலகினூடாக மேற்கொள்ளப்படும் நடவடிக்கைகளுக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும்.

VII. அந்த நிதி ஒதுக்கீடுகளை பயன்படுத்தி,

i. இப்பராமரிப்பு மற்றும் திருத்த வேலைத்திட்டங்களுக்கான வளவாளர் உதவியினை வழங்கும் டிஜிட்டல் கல்வித் தொழில்நுட்பக் குழுவின் அங்கத்தவர்களுக்கும் ஒருங்கிணைப்பு உத்தியோகத்தர்களுக்கும் உரிய வளவாளர் கொடுப்பனவுகளை கல்வி அமைச்சின் கட்டண அளவுகளின் அடிப்படையில் வழங்குதல்.

ii. திருத்தப் பணிகளுக்கு அவசியமாகும் சிறு அளவிலான பாகங்கள் மற்றும் பயன்பாட்டுப் பொருட்களை கொள்வனவு செய்தல். (உதா – Diode/ capciters/ ஈயம் போன்றவை)

iii. நிகழ்ச்சிகள்/ செயலமர்வுகளாக ஏற்பாடு செய்யப்படாது பாடசாலை/ கல்வி நிறுவனங்களுக்கு சென்று மேற்கொள்ளப்படும் மேற்பார்வை/ திருத்தப் பணிகளின் போது தாபன விதிக்கோவையின் அடிப்படையில் இணைந்த படிகள் மற்றும் போக்குவரத்துக் கொடுப்பனவிற்குரிய செலவுகளைச் செய்தல்.

iv. பாடசாலை மட்ட டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் தொழில்நுட்பக் குழுக்களுக்கான பயிற்சி அமர்வுகளை நடாத்துதல்.

v. நிதி ஒதுக்கீடுகளில் மிகுதியேதும் இருப்பின் தேவைப்பாட்டின் அடிப்படையில் திருத்தப் பணிகளுக்கு அவசியமாகும் பாகங்கள்/ கருவிகளைக் கொள்வனவு செய்தல்.

vi. 2010-06-28 ஆம் திகதிய கல்வி அமைச்சின் 2010/25 ஆம் இலக்க சுற்றுநிருபத்தின் அடிப்படையில் வருடாந்தம் நடாத்தப்படும் பாடசாலைக் கணினி ஆய்வுகூடங்களில் காணப்படும் கணினிப் பாகங்கள் மற்றும் கணினி வலையமைப்பு பராமரிப்பு பற்றிய தேசிய மட்டத்திலான கணினிப் பாகங்கள் மற்றும் வலையமைப்பு பராமரிப்பு நிகழ்ச்சித் திட்டம் தொடர்ந்தும் நடைமுறைப்படுத்தப்படும்.

## 08. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் பற்றிய தகவல்களை பேணிச் செல்லல்.

1. டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்புடன் தொடர்புடைய தகவல்களை இற்றைப்படுத்துதல் மிகவும் அவசியமானதாகும். இதற்காக கல்வி அமைச்சினூடாக மேம்படுத்தப்பட்டு வழங்கப்படுகின்ற இணையவழிக் கட்டமைப்பினூடாக உரிய தகவல்களை இற்றைப்படுத்தும் செயற்பாடு மேற்கொள்ளப்பட வேண்டும். மேற்படி தகவல்களை அடிப்படையாகக் கொண்டு பெறப்படும் அறிக்கையை (Report) வலய டிஜிட்டல் உட்கட்டமைப்பு வசதிகள் பராமரிப்பு அலகினுள் ஆவணப்படுத்தி வைத்திருக்க வேண்டுமென்பதுடன், மென் பிரதியொன்றினையும் வைத்திருக்க நடவடிக்கை எடுக்க வேண்டும்.

இந்த ஆலோசனைக் கோவையின் உள்ளடக்கம் பற்றிய ஏதேனும் விளக்கங்கள் தெளிவுபடுத்தல்கள் அல்லது இந்த ஆலோசனைக் கோவையினூடாக உள்ளடக்கப்படாத டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் மேம்பாடு தொடர்பில் எழக்கூடிய பிரச்சினைகள் தொடர்பில் கல்வி அமைச்சின் டிஜிட்டல் கல்வி உட்கட்டமைப்பு வசதிகள் கிளையுடன் தொடர்புகொண்டு தீர்மானித்தல் வேண்டும்.